IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of August, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய தந்தையார் பெயர் R.தாமோதரன் மற்றும் தாத்தாவின் பெயர் ராஜி மேஸ்திரி ஆகும். வழக்கு சொத்தை என்னுடைய தாத்தா தான் வாங்கினார் என்று சொன்னால் சரிதான்.

2. என்னுடைய தாத்தா வாங்கிய சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியாது ஆனால் எனக்கு வந்த சொத்தின் விவரம் தெரியும். என்னுடைய தாத்தா வாங்கிய சொத்தில் தான் என்னுடைய அப்பா பெயருக்கு settlement எழுதி வைத்தார் என்று சொன்னால் சரிதான்.

3.என்னுடைய அப்பா பெயருக்கு என்னுடைய தாத்தாவால் எழுதி வைக்கப்பட்ட settlement ல் உள்ள சர்வே.எண் மற்றும் விஸ்தீரணம் என்னெவென்றால் எனக்கு தெரியும். 285/2 ல் 150 செண்ட் அதாவது 1 1/2 ஏக்கர் மற்றும் 10 செண்ட் மேற்படி சொத்தில் உள்ள கிணறு மற்றும் பம்புசெட்டில் மூன்றில் ஒரு பாகம் ஆகும் மற்றும் 276/1 ல் 1 ஏக்கர் மற்றும் 288/1A ல் 85 செண்ட் மொத்தம் 3 ஏக்கர் 45 செண்ட் ஆகும். பொதுவில் இருக்கும் இடத்தில் மூன்றில் ஒரு பாகம் ஆகும்.

4. 10.12.1961ம் ஆண்டுக்கான ராஜி மேஸ்திரி வாங்கிய சொத்துக்களான பத்திரம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் சர்வே.எண்.276 ல் 3 ஏக்கர் 43 செண்ட் தீர்வை 3.64 பைசா இதன் பொதுவில் 48 செண்ட்டுக்கான செலுத்தப்பட்ட தீர்வை 56 பைசா உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு புரியவில்லை.

5. என்னுடைய தாத்தா 48 செண்ட் வாங்கியதாக வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் என்னுடைய தாத்தா இராணுவத்தில் வேலை செய்ததால் அசையா சொத்துகள் அரசால் கொடுககப்பட்டது அதில் எங்களுக்கு கொஞ்சம் கொடுத்தார்.

6. சர்வே,எண்.276 ல் உள்ள சொத்தானது பட்டா சொத்து என்றாலும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்து என்றாலும் அதன் முழு விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா இராணுவத்தில் வேலை செய்ததற்கு சர்வே.எண்.285/2 என்ற எண்ணில் 4 ஏக்கர் 40 செண்ட் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு முழு விவரம் தெரியவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI